

நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (20.08.2025) வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள், நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணிகள் மற்றும் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து சென்னை முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் நீர்வளத் துறையின் அரசுச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் மற்றும் காவிரி தொழில்நுட்ப குழுமத் தலைவர் இரா.சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் நடைபெற்ற சர்வதேசச் சட்டமன்ற உறுப்பினர்கள் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு திரும்பிய கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், அம்மாநாட்டுச் சான்றிதழைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

### பருவமழைக்கு முன்னதாக

# வெள்ளத்தடுப்புப் பணிகளை விரைந்து முடித்திடுக!

## ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தல்!

**சென்னை,ஆக.22-**

**நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையில், நேற்று முன்தினம் 20.08.2025 காணொலிக் காட்சி வாயிலாக நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

இந்த ஆய்வுக் கூட்டத்தில், அரசால் இதுவரை அறிவிக்கப்பட்ட 1782 பணிகளில், முடிவுற்ற பணிகள் - 1007, முன்னேற்றத்தில் உள்ள பணிகள் - 775, அவைகளின் பணி வாரியாக அனைத்து மண்டலங்களிலும் நடைபெற்று வரும் திட்டப் பணிகள், வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணிகளின் முன்னேற்றம் குறித்து நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள் அறிவித்த ரூ.595.18 கோடி மதிப்பீட்டிலான 15 அறிவிப்புகளையும் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தினார். மேலும் 2025-2026 ஆண்டின் அறிவிப்புப் பணிகளில் ரூ.1321.52 கோடி மதிப்பீட்டில் 254 பணிகளுக்கு அரசாணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தினார்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ரூ.338.00 கோடி மதிப்பீட்டில் அரசாணை வழங்கப்பட்ட ஒக்கியம் மடுவு உள்ளிட்ட 12 வெள்ளத் தணிப்புப் பணிகளை பருவமழைக்கு முன்னதாக முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் ரூ.98 கோடி செலவில் சிறப்பு தூர் வாரும் பணிகள் சீரிய முறையில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் முடிக்கப்பட்டு மேட்டூர் அணையிலிருந்து குறித்த நேரத்தில் பாசனத்திற்கு நீர் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலத்தின் அனைத்து தூர் வாரும் பணிகளையும் விரைந்து முடிக்குமாறும் அறிவுறுத்தினார். இன்று 20.08.2025 காலை 8.00 மணி நிலவரப்படி 1,14,098 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் முழுக்கொள்ளளவான 120.13 அடியில் உள்ளது, இச்சூழலில் 16 கண் மதகுகள் வழியாக உபரிநீர் திறக்கப்பட்டுள்ளது. இதற்கு தேவையான வெள்ள அபாய எச்சரிக்கையினை தேவைப்படும் போது உடனடியாக விடுக்க சம்பந்தப்பட்ட நீர்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆண்டில் ஜீன் மாதம் 29.06.2025 தேதியிலும், ஜீலை மாதத்தில் 05.07.2025, 20.07.2025, மற்றும் 25.07.2025 ஆகிய தேதிகளிலும் 5-வது முறையாக 20.08.2025 இன்று முழுக்கொள்ளளவை (120 அடி) எட்டியுள்ளது எனக் குறிப்பிட்டு, கிடைக்கும் உபரி நீரை முறை சார்ந்த குளங்கள், ஏரிகள் மற்றும் சரபங்கா போன்ற திட்டங்களுக்கு திருப்பிவிட்டு நீரை முடிந்த அளவு சேமிக்க நீர்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். சரபங்கா திட்டத்தில் 56 ஏரிகளில் 49 ஏரிகள் நிரப்பப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய 7 ஏரிகளும் விரைவில் நிரப்பிட அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில்நீர் வளத் துறையின் அரசுச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், காவிரி தொழில்நுட்ப குழுமத் தலைவர் இரா.சுப்பிரமணி யன், நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் சு. கோபாலகிருஷ்ணன் மற்றும் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் (ம) செயற் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

# தூர்தர்சன் தமிழ் தொலைக்காட்சி பொன்விழா கொண்டாடப்படுமா?

## ஒன்றிய அமைச்சரிடம் – இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 22 –

தூர்தர்சன் தமிழ் தொலைக்காட்சியின் பொன்விழா கொண்டாடப்படுமா என மாநிலங்களவையில் இரா. கிரிராஜன் கேள்வி எழுப்பினார்.

நாடளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் கழக மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், ஒன்றிய அரசிடம், 1975ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ல் தொடங்கப்பட்ட முதல் பிராந்திய தொலைக்காட்சியான ”DD தமிழ் சேனலின் 50 ஆண்டுகளை எட்டியுள்ள நிலையில், அதன் பொன் விழாவைக் கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளதா? நாட்டின் அனைத்து DD மையங்களிலும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் ஸ்டுடியோ உள்கட்டமைப்புக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? தமிழ் நாடு உட்பட நாடு முழுவதும் தொலைத்தொடர்பு மையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க திட்டங்கள் உள்ளதா? என்ற கேள்விகளை தகவல் மற்றும் ஒளிபரப்பு துறை அமைச்சரிடம் எழுப்பி இருந்தார்.

இதற்கு பதில் அளித்த அத்துறையின் இணை அமைச்சர் எல். முருகன், தூர்தர்சன் மற்றும் அகில இந்திய வானொலி (AIR ஆகாசவாணி) மூலம் பிராந்திய மொழி ஒளிபரப்பை ஊக்குவிக்க அரசு உறுதிபூண்டுள்ளதாகவும், DD தமிழ் பொன் விழாவை கொண்டாடும் வகையில், சிறப்பு நிகழ்ச்சிகள், நினைவு நிகழ்வுகள், பிரபலங்களின் பல்வேறு குறுகிய வீடியோ செய்திகள், பத்ம விபூஷண் பத்மா சுப்பிரமணியம் மற்றும் கலா ஆகியோரின் சிறப்பு நடன நிகழ்ச்சிகள் ஆகியவற்றிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பத்ம விருது பெற்றவர்கள் பாராட்டப்படும் சிறப்பு பார்வையாளர் நிகழ்ச்சியும், ஸ்டுடியோ அடிப்படையிலான இசை நிகழ்ச்சிகளும் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன என்றும் இணை அமைச்சர் எல்.முருகன் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோவை ஆகிய மூன்று நிகழ்ச்சி தயாரிப்பு மையங்கள் பிராந்திய பார்வையாளர்கள் மட்டும் அல்லாமல், தேசிய நிகழ்ச்சி கலவைகளுக்கும் பங்களிப்பை வழங்குகின்றன என்று பதிலில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

தூர்தர்சன் மற்றும் அகில இந்திய வானொலியின் ஒளிபரப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், நவீனமயமாக்குதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு ரூ.2539.61 கோடி செலவில், ஒளிபரப்பு உள்கட்டமைப்பு மற்றும் வலையமைப்பு மேம்பாட்டு (BIND) திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் பதிலில் கூறப்பட்டுள்ளது. இந்த திடடத்தில், டிரான்ஸ்மிட்டர்கள் மற்றும் ஸ்டுடியோக்களின் நவீனமயமாக்கல், DTH மூலம் பார்ப்பதற்காக DD இலவச டிஷ் மற்றும் DD தொலைக்காட்சி சேனல்களின் விரிவாக்கம், உற்பத்தி மற்றும் பரிமாற்ற வசதிகளின் நவீனமயமாக்கல், உள்ளடக்க உருவாக்கம், உள்ளடக்க புதுமை, பொது சேவை ஒளிபரப்பின் வரம்பை விரிவுபடுத்துதல் ஆகியவை அடங்கும் என்றும் இணை அமைச்சர் பதில் அளித்துள்ளார்.



தூர்தர்சனின் எல்லையை விரிவுபடுத்தும் வகையில், டிடி இலவச டிஷ்ஷில் 2019ஆம் ஆண்டில் 104 சேனல்களின் எண்ணிக்கை தற்போது 510 சேனல்களாக விரிவடைந்துள்ளதாகவும், அவற்றில் 50 தூர்தர்சன் சேனல்கள், 92 தனியார் சேனல்கள், 48 வானொலி சேனல்கள், 320 கல்வி சேனல்கள் ஒளிபரப்பாடுவதாகவும் புள்ளி விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பிரசார் பாரதியின் ”WAVWES என்கிற OTT தளத்தின் மூலம், தூர்தர்சன் மற்றும் அகில இந்திய வானொலி ஆகியவற்றின் சேவைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ் உட்பட பல இந்திய மொழிகளில் உள்ளடக்கத்தை வழங்கிவருவதாகவும், திமுக எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு ஒன்றிய அரசு பதில் அளித்துள்ளது. இந்த தளங்களில் தமிழ் மொழி உள்ளடக்கம் தீவிரமாக ஊக்குவிக்கப்படுவதன் மூலம், பிராந்திய குரல்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்கிறது என்றும் இணை அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட
## முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு
# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



துறையூர் கிழக்கு ஒன்றியம்,
திருச்சி வடக்கு மாவட்டம்.



தா.பழூர் மேற்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



கொங்கணாபுரம் வடக்கு ஒன்றியம்,
சேலம் மேற்கு மாவட்டம்.



திருப்புவனம் பேரூர்,
சிவகங்கை மாவட்டம்.



மண்டபம் கிழக்கு ஒன்றியம்,
இராமநாதபுரம் மாவட்டம்.



கொடைக்கானல் நகரம் (மூஞ்சிக்கல்),
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



அரூர் கிழக்கு ஒன்றியம்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



இராஜபாளையம் கிழக்கு ஒன்றியம்,
விருதுநகர் தெற்கு மாவட்டம்.



சுசீந்திரம் பேரூர்,
கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்.